இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 28-08-2025



# காலை உணவின் கதிரவன்

**மாநிலத்தின் முதலமைச்சராக மட்டுமல்ல, பசிப்பிணி மருத்துவராக உயர்ந்து நிற்கிறார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். அவர்தான் காலை உணவின் கதிரவன்!**

'மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்கிறது மணிமேகலை. அந்தக் காப்பியத்தின்படி உயிரூட்டும் முதலமைச்சராக உயர்ந்து நிற்கிறார் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

சென்னை அசோக் நகரில் உள்ள பெண்கள் மேனிலைப்பள்ளிக்கு ஒரு விழாவுக்குச் சென்றிருந்த முதல் அமைச்சர், அங்கு படிக்கும் மாணவிகளிடம், "காலையில என்ன சாப்பிட்டீங்க?" என்று கேட்டார். 'சாப்பிடவில்லை' என்று பெரும்பாலானவர்கள் சொன்னார்கள். 'எங்க வீட்டுல சமையல் பண்ணல' என்று ஒரு மாணவி சொன்னார். 'மத்தியானம் ஸ்கூல்ல சாப்பிட்டுக்கோ என்று அம்மா சொல்லிட்டாங்க' என்று இன்னொரு மாணவி சொன்னார். 'காலையில் டீ மட்டும் குடிச்சிட்டு வந்தேன்' என்று மற்றொரு மாணவி சொன்னார். இதை எல்லாம் மனதில் வைத்துத்தான் 'காலை உணவுத் திட்டம்' உருவாக்கினார் முதல் அமைச்சர்.

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளின் போது மதுரையில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. தலைவர் கலைஞர் பிறந்த திருக்குவளையில் இருந்து அனைத்து தொடக்கப் பள்ளிகளுக்குமான திட்டமாக விரிவு படுத்தப்பட்டது. தினந்தோறும் காலையில் 17 லட்சம் மாணவ, மாணவியர்க்கு காலை உணவு வழங்கப்பட்டு வந்தது. இதனை இன்னும் விரிவுபடுத்த உத்தரவிட்டார் முதலமைச்சர் அவர்கள். நகர்ப்புறப் பகுதிகளில் செயல்படும் 2,429 அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 3.06 இலட்சம் குழந்தைகள் பயன்பெறும்வண்ணம், காலை உணவுத் திட்டத்தினை விரிவாக்கம் செய்துள்ளார். இனி தமிழ்நாட்டில் செயல்படும் 37,416 அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளிகளில் பயிலும் 20.59 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள். ஆண்டொன்றுக்கு 600 கோடி மதிப்பீட்டில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இனி 20 லட்சத்து 59 ஆயிரம் மாணவ, மாணவியர் தினந்தோறும் காலை உணவை பள்ளிகளில் உண்ண இருக்கிறார்கள். ஒரு குடும்பத்தின், அந்தக் குழந்தைகளின் பெற்றோரின் கடமையையும் சேர்த்துச் செய்கிறது திராவிட மாடல் ஆட்சி.

**இத்திட்டத்தைத் தொடங்கி வைக்க பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த்மான் அவர்களை அழைத்திருந்தார் முதலமைச்சர். "இந்தத் திட்டத்தை நான் எங்கள் மாநிலத்தில் செயல்படுத்த இருக்கிறேன். நாளைய தினம் பஞ்சாப் மாநில அமைச்சரவையில் இது தொடர்பாக முடிவெடுக்கப்படும்" என்று முதலமைச்சர் பகவந்த்மான் சொன்னதுதான் இந்தத் திட்டத்தின் மாபெரும் வெற்றியாகும்.**

5 ஆம் வகுப்பு மாணவன் ஹரிஹரன் , "காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை முதலமைச்சர் அவர்கள் எங்கள் பள்ளியில் தொடங்கி வைத்தது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது" என்று சொல்லி இருக்கிறார். தாருணிகா என்ற ஐந்தாம் வகுப்பு மாணவி, "முதலமைச்சர் என்னுடைய அருகில் அமர்ந்து உணவு சாப்பிட்டது மகிழ்ச்சியாக இருந்தது. என் அம்மா தினமும் காலையில் வேலைக்குச் செல்வதால் சாப்பிடாமல் வந்து விடுவேன். இப்போது பள்ளியிலேயே உணவு கிடைத்துவிடுகிறது" என்று மகிழ்ச்சி அடைகிறார். "பல நாட்கள் பசியோடு பள்ளிக்கு வந்திருக்கிறேன். இனி அந்தப் பிரச்சினை இல்லை" என்கிறார் இம்மானுவேல் என்ற ஐந்தாம் வகுப்பு மாணவன்.

சாந்தோம் பகுதியைச் சேர்ந்த ஜூலி என்ற தாய், "காலையில் நேரம் ஆகிவிட்டது என்று சொல்லி என் மகள் சாப்பிடாமல் போய்விடுவாள். நான் வருத்தமாக இருப்பேன். 'காலை உணவுத் திட்டம்' வந்த பிறகு எனக்கு வருத்தம் இல்லை. பள்ளியில் இருந்து வீட்டுக்கு வந்ததும், காலையில் கேசரி சாப்பிட்டேன், இட்லி சாப்பிட்டேன், பொங்கல் சாப்பிட்டேன் எனக் கூறுவதைக் கேட்டு எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது" என்று சொல்லி இருக்கிறார்.

"வீட்டில் கஷ்டப்பட்டு சாப்பிடும் பிள்ளைகளும் பள்ளியில் மகிழ்ச்சியாக சாப்பிடுகிறார்கள்" என்கிறார் சத்யா என்ற பெண்.

**காலை உணவுத் திட்டம் தொடர்பாக மாநில திட்டக்குழு மற்றும் மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சித்துறை ஒரு ஆய்வைச் செய்துள்ளது. மாணவர்களின் உண்ணும் பழக்கத்தில் மேம்பாடு ஏற்பட்டுள்ளது. குழந்தைகளின் உடல் வலிமை பெற்றுள்ளது. அவர்கள் மனவலிமை பெற்றுள்ளார்கள். காலையில் அனைவரும் சேர்ந்து உணவு உண்ணும் போது, குழந்தைகளிடம் ஒருவருக்கொருவர் அன்பான நட்புறவு ஏற்படுகிறது. ஒருவருக்கொருவர் சேர்ந்து பேசுகிறார்கள். பழகுகிறார்கள். படிப்பில் அக்கறை செலுத்துகிறார்கள். மனதில் எதிர்மறை எண்ணம் மறைந்து, நேர்மறையாகச் சிந்திக்கிறார்கள். இப்படி தனது ஆய்வின் மூலமாக கண்டுபிடித்துச் சொல்லி இருக்கிறது திட்டக்குழு.**

**'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' ஒட்டுமொத்தமாக பள்ளிக்கல்வித் துறையை மேம்படுத்தி இருக்கிறது. பள்ளிக்கு மாணவ, மாணவியரின் வருகை விழுக்காடு அதிகரித்துள்ளது. ஒட்டு மொத்தமாக அவர்களின் கற்றல் திறன் மேம்பட்டுள்ளது. கல்வியில் அனைவருக்கும் சமமான ஆர்வம் ஏற்பட்டுள்ளது. ஊட்டச்சத்து அதிகம் ஆனதால் நோய் எதிர்ப்பு சக்தியை பிள்ளைகள் பெற்றுவருகிறார்கள். இதன் மூலமாக நோய்த்தொற்றானது குறைகிறது. இப்படி எத்தனையோ பலன்களைத் தந்துவிட்டது 'காலை உணவுத் திட்டம்'.**

"அப்பாவாக இருந்து காலை உணவு வழங்கிய முதலமைச்சருக்கு பள்ளிச் சிறுவர்கள் நன்றி தெரிவிக்கிறார்கள்.

"எங்கள் குடும்பத்தில் ஒருவராக இருந்து முதலமைச்சர் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி இருக்கிறார்" என்று பெற்றோர்கள் நெகிழ்ச்சி தெரிவிக்கிறார்கள்.

"பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்து அதிகரிக்கிறது" என்று ஆசிரியைகள் சொல்கிறார்கள். இதுதான் இந்தத் திட்டத்தின் மகத்தான வெற்றி ஆகும்.

அறிவார்ந்த சமூகம், அனைவர்க்குமான சமுகம், வறுமை இல்லாத சமுகம், பெற்றோர்களின் குடும்ப சுமை குறைந்த சூழல் ஆகிய அனைத்தையும் உருவாக்கும் திட்டமாக 'காலை உணவுத் திட்டம்' அமைந்ததால்தான் அதனை விரிவாக்கம் செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

'பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்' என்பது பழமொழி. பசியைப் போக்கினால் பத்து விதமான நன்மைகள் கிடைக்கும் என்பதை மெய்ப்பித்து விட்டது மாண்புமிகு முதலமைச்சரின் கருணை உள்ளம்!



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ராயப்பேட்டை மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில், பேகம் சாகிப் மெயின் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சமூக நலக்கூடத்தில் நேற்று முன்தினம் (26.8.2025) நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மாமன்ற உறுப்பினர் திருமதி வே. கமலா செழியன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உடனிருந்தனர்.

### சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டார்!

## பொதுமக்களுடன் கலந்துரையாடி தீர்வுகள் வழங்கினார்!

*சென்னை, ஆக.27-*

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராயப்பேட்டை பேகம் சாகிப் மெயின் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சமூக நலக்கூடத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார்.

பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள், திட்டங்களின் கீழ் பொதுமக்களின் குறைகளை வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் ஜூலை 15 முதல் நவம்பர் 2025 வரை அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 10,000 முகாம்கள் நடைபெறவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படுகின்றன. மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று, விண்ணப்பத்தினை பெற்று, பூர்த்தி செய்து தங்கள் விண்ணப்பத்தினை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறுகின்றன.

நேற்று (26.8.2025) சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வார்டு 119, ராயப்பேட்டை மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில், பேகம் சாகிப் மெயின் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சமூக நலக்கூடத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, எரிசக்தித் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை உள்ளிட்ட 13 அரசுத்துறைகள் மூலம் மக்களிடமிருந்து மனுக்கள் பெற்று உரிய பதிவுகளை மேற்கொண்டு அதற்கான ஒப்பமும் வழங்கப்பட்டது. முகாமிற்கு வருகை தந்த பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், சிறப்பு மருத்துவ முகாமும் நடத்தப்பட்டது.

மேலும் தூய்மை பணியாளர்களுக்கு அரசின் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் விவரங்கள், நலத்திட்ட உதவிகளை பெறத்தேவைப்படும் ஆவணங்கள் குறித்த தகவல் தொகுப்பு கையேடு முகாமிற்கு வருகை தந்த தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார். மேலும் இந்த முகாமில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் பொது மக்களுக்கு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருந்துகள் வழங்கப்படுவதையும் பார்வையிட்டார்.

இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மாமன்ற உறுப்பினர் திருமதி வே. கமலா செழியன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கோயம்புத்தூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில்

# மேம்பாட்டுத் தேவைகள் - ரயில்வே சேவை மேம்பாடுகள்!

## தெற்கு ரயில்வே கோட்ட மேலாளரிடம் – முனைவர் கணபதி ப.ராஜ்குமார் எம்.பி. கோரிக்கை!

கோயம்புத்தூர், ஆக. 28 –

கோயம்புத்தூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மேம்பாட்டுத் தேவைகள் மற்றும் ரயில்வே சேவை மேம்பாடுகள் குறித்து தெற்கு ரயில்வே கோட்ட மேலாளரிடம் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கோரிக்கை வைத்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு: கோயம்புத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள ரயில்வே உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள் தொடர்பாக பொதுமக்களின் பல நீண்டகால கோரிக்கைகள் மற்றும் அழுத்தமான தேவைகள் குறித்து உங்கள் கவனத்தை ஈர்க்க நான் எழுதுகிறேன். வளர்ந்து வரும் மக்கள்தொகை, பொருளாதார செயல்பாடு மற்றும் பிராந்தியத்தின் இணைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்த வளர்ச்சிகள் முக்கிய மானவை.

1. புதிய ரயில் சேவைக்கான கோரிக்கை : திருச்செந்தூரில் உள்ள புகழ்பெற்ற அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் செல்லும் பக்தர்கள், பொதுப் பயணிகளின் நீண்டகால பயணத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கோவையிலிருந்து மதுரை மற்றும் தூத்துக்குடி வழியாக திருச்செந்தூருக்குச் செல்கின்றனர். தொழிலதிபர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் கோரிக்கைக்கு ஏற்ப, தூத்துக்குடி துறைமுகம் மற்றும் கோவை இடையே சரக்கு போக்குவரத்து மேம்படுத்தப்பட வேண்டும் என்ற வலுவான மற்றும் நீண்டகால கோரிக்கை உள்ளது. குறிப்பாக கோயம்புத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இயங்கும் தொழில் துறை மற்றும் உற்பத்தித் துறைகளுக்கு, மூலப்பொருட்கள் மற்றும் முடிக்கப்பட்ட பொருட்களின் சரியான நேரத்தில் மற்றும் செலவு குறைந்த போக்குவரத்தை உறுதி செய்வதற்கு இந்த பாதை இன்றியமையாதது.

கோயம்புத்தூரில் இருந்து திருச்சிராப்பள்ளி வழியாக வேளாங்கண்ணிக்கு தமிழ்நாட்டின் முக்கிய கிறிஸ்தவ புனிதத் தலமான வேளாங்கண்ணியில் உள்ள நல்ல ஆரோக்கிய அன்னையின் பசிலிக்காவிற்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் பக்தர்களின் பயணத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக.

பெங்களூருக்கு இரவு ரயில் மென்பொருள் வல்லுநர்கள் மற்றும் வணிகர்களின் நலனுக்காக கோவையில் இருந்து பெங்களூருக்கு தினசரி இரவு ரயில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பது பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும்.

2. நெரிசலைக் குறைக்கும் கோயம்புத்தூர் சந்திப்பு : கோயம்புத்தூர் சந்திப்பில் இருந்து புறப்படும் சில ரயில்களை வடக்குகோயம்புத்தூர் நிலையத்திலிருந்து புறப்படும் வகையில் மாற்றலாம், இது கோவை சந்திப்பில் நெரிசலைக் குறைக்கும்.

3. பொள்ளாச்சிக்கு அடிக்கடி மெமு சேவைகள் : முதல் கட்டமாக கோயம்புத்தூர் மற்றும் பொள்ளாச்சி இடையே ஒரு நாளைக்கு நான்கு முறை மெமு ரயில்களை அறிமுகப்படுத்த கோரிக்கை.

4. கோயம்புத்தூர் இரயில் நிலையத்தின் மறுசீரமைப்பு : கோயம்புத்தூர் இரயில் நிலையத்திற்கு முன்மொழியப்பட்ட மறுவடிவமைப்புப் பணிகளின் தொடக்கத் தேதியை தயவுசெய்து தெளிவுபடுத்தவும்.

5. வரலாற்று ரயில் சேவைகளின் மறுசீரமைப்பு: மீட்டர் கேஜ் காலத்தில் இயக்கப்பட்ட பின்வரும் ரயில்களை மீண்டும் இயக்க கோரிக்கை : ரயில் எண் 6715/6716 கோயம்புத்தூர் ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ், ரயில் எண் 719/720 கோயம்புத்தூர் தூத்துக்குடி, கோயம்புத்தூர் கொல்லம், கோவை போடிநாயக்கனூர்

6. ரயில் சேவைகள் நீட்டிப்பு : ரயில் எண் 16721/16722 மதுரை கோயம்புத்தூர் முன்பதிவு செய்யப்படாத எக்ஸ்பிரஸ் ரயில் மேட்டுப்பாளையம் வரை நீட்டிக்கப்பட வேண்டும்.

7. மெமு சேவைகள் மீண்டும் அறிமுகம் : கோயம்புத்தூர் மற்றும் சேலம் இடையே ரயில் எண் 66602/66603 மெமு பயணிகள் இயக்கத்தை மீண்டும் தொடங்க கோரிக்கை.

8. பெட்டிகளுடன் செம்மொழி எக்ஸ்பிரஸ் இயக்கம் : மன்னார்குடி கோயம்புத்தூர் செம்மொழி விரைவு வண்டியை கோயம்புத்தூரில் இருந்து மதுரைக்கு வழக்கமான எக்ஸ்பிரஸ் சேவையாக மாற்றவும்.

9. ஜன் சதாப்தி எக்ஸ்பிரஸ் நீட்டிப்பு: ரயில் எண் 12083/12084 கோயம்புத்தூர் மயிலாடுதுறை ஜன் சதாப்தி எக்ஸ்பிரஸ் சிதம்பரம் வரை நீட்டிக்க கோரிக்கை.

10. காரைக்காலுக்கு தினசரி ரயில் : பழனி, திண்டுக்கல், திருச்சி, திருவாரூர் வழியாக கோயம்புத்தூரில் இருந்து காரைக்காலுக்கு தினசரி எக்ஸ்பிரஸ் சேவையை அறிமுகப்படுத்தவும்.

11. சிறப்பு ரயிலை முறைப்படுத்துதல் : தாம்பரத்தில் இருந்து மயிலாடுதுறை திருச்சி பொள்ளாச்சி வழியாக கோவைக்கு இயக்கப்படும் சிறப்பு ரயிலை வழக்கமான தினசரி சேவையாக மாற்ற வேண்டும்.

12. இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் நீட்டிப்பு : ரயில் எண் 22609/22610 மங்களூர் கோயம்புத்தூர் இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் மேட்டுப்பாளையம் வரை நீட்டிக்கப்படலாம்.

13. வாராந்திர சேவைகளின் அதிர்வெண் அதிகரிப்பு : மேட்டுப்பாளையம் திருநெல்வேலி மற்றும் மேட்டுப்பாளையம் தூத்துக்குடி வாராந்திர ரயில்கள் தினசரி சேவைகளாக மேம்படுத்தப்படலாம்.

14. வந்தே பாரத் கூடுதல் பெட்டிகள் : அதிக பயணிகளின் தேவையை கருத்தில் கொண்டு, கோவை சென்னை வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலில் 8 கூடுதல் பெட்டிகள் சேர்க்கப்பட வேண்டும்.

இரட்டைப் பாதைப் பணி, இருகூர் முதல் போத்தனூர் வரை : இருகூர் போத்தனூர் இடையே அனுமதிக்கப்பட்ட இரட்டிப்புப் பணிக்கான நிலை மற்றும் எதிர்பார்க்கப்படும் காலக்கெடுவை தயவு செய்து வழங்கவும்.

16. வடக்கு கோயம்புத்தூர் நிலையத்தின் வளர்ச்சி : வடக்கு கோயம்புத்தூர் நிலையத்தில் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் முக்கிய ரயில்களுக்கு நிறுத்தம் சேர்க்க கோரிக்கை.

17. போத்தனூர் சந்திப்பை மேம்படுத்துதல் : தென்னக ரயில்வே பொது மேலாளரின் வருகையின் போது உறுதியளித்தபடி போதனூரில் உள்ள ரயில் பெட்டி பராமரிப்பு வசதிகளின் நிலை மற்றும் இரண்டாவது முனையமாக மாற்றப்படும். விரைந்து நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுக்க ப் பட்டுள்ளது.

18. தேர்ந்தெடுக்கப்பட்ட ரயில்களுக்கு போதனூரில் நிறுத்தம் : உள்ளூர் தேவையைக் கருத்தில் கொண்டு பின்வரும் ரயில்கள் போத்தனூர் சந்திப்பில் ஒரு நிமிடம் நிறுத்தப்படலாம் : ரயில் எண் 22609/22610 பெங்களூர் கோயம்புத்தூர் இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ், ரயில் எண் 12677/12678 எர்ணாகுளம் பெங்களூர் இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ், ரயில் எண் 16187/16188 எர்ணாகுளம் காரைக்கால் எக்ஸ்பிரஸ்

19. ஈச்சனாரியில் புதிய ஸ்டேஷன் : கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள், ஈச்சனாரி கோவில் உள்ளதை கருத்தில் கொண்டு, ஈச்சனாரி மேம்பாலம் அருகே புதிய ரயில் நிலையம் அமைக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

20. தரை மட்டத்தில் முன்பதிவு வசதி : கோயம்புத்தூர் ரயில் நிலையத்தில் தற்போதைய முன்பதிவு கவுன்டர்கள் முதல் தளத்தில் உள்ளது, இது மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி பயணிகளுக்கு சிரமமாக உள்ளது. மேற்குப் பகுதியில் தரைமட்ட முன்பதிவு வசதி கோரப்பட்டுள்ளது.

21. நெரிசல் மற்றும் கூடுதல் நிறுத்தங்கள் : கோயம்புத்தூர் சந்திப்பின் நெரிசலைக் குறைக்கவும், புறநகர்ப் பயணிகளுக்கு சிறந்த சேவை செய்யவும், தேர்ந்தெடுக்கப்பட்ட நீண்ட தூர ரயில்களை (சென்னை, பெங்களூர், திருச்சி நோக்கி) பீளமேடு மற்றும் இருகூர் நிலையங்களில் நிறுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வு நடத்தப்படலாம்.

இந்த கோரிக்கைகள் கோயம்புத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பயணிகளின் அவசர தேவைகள் பிரதிபலிக்கின்றன என்று கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (26.08.2025) திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட உறையூர் முகூர்த்தம் திருமண மண்டபத்தில் நடைபெற்று வரும் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்களை பதிவேற்றம் செய்வதையும் முகாமின் செயல்பாடுகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுடன் கலந்துரையாடி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் அருள், நகரப் பொறியாளர் சிவபாதம், உதவி ஆணையர்கள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.